ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

**(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)**

**தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி**

================================================================================

## அறிவுரை 3. அபவர்க்கத்தைப் பெற விழைமின்.

**மோக்ஷத்தில் ஆசை கொள்ளுங்கள். முமுக்ஷுவாகுங்கள்.**

मुक्तानन्दामृतैकोदधिपृषतगणस्पर्धिनः अन्ये पुमर्थाः

முக்தாநந்தா$_3$ம்ருதைகோத$_3$தி$_4$ப்ருஷதக$_3$ணஸ்பர்தி$_4$ந: அந்யே புமர்தா$_2$:

- அதிகரண ஸாராவளீ

மனிதன் நாடும் வஸ்துக்களைப் புருஷார்த்தங்கள் என்பர். அவற்றுள் ஒன்று மோக்ஷம். அது பேரானந்தமாக இருப்பதால் மற்றவற்றை விட்டு மோக்ஷத்திலேயே விருப்பம் கொள்வது நல்லது. இதைச் சொல்லும் ஸாராவளீ ச்லோகப்பகுதியின் அர்த்தம்:

மோக்ஷானந்தம் அமுதக்கடல் போன்றது. அதன் சிறு துளிக்குக்கூட ஈடாக மாட்டாதவை மற்ற புருஷார்த்தங்கள். மோக்ஷமெனும் அமுதக்கடலின் திவலைத் துளிக்குப் போட்டியிடுபவை அவை.

நான்கு புருஷார்த்தங்கள் உண்டு. அறம், பொருள், இன்பம், வீடு என்று. வீடு என்பதுதான் மோக்ஷம். மோக்ஷத்தில் கல்போலச் சுகதுக்கமற்று இருப்பதாகச் சொல்வோர் பிறர். நம் வைதிகமதப்படி மோக்ஷத்தில் பேரானந்தம். அந்தமில் பேரின்பம். இதை அறிந்து நாம் மோக்ஷமார்க்கத்தை நாட வேண்டும். ஸம்ஸாரமே போதும் என்றிருக்கலாகாது.

*****************